www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Kanchipuram District

# முதல் இடைப்பருவத்தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## கணக்குப்பதிவியல்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 x 1 = 10

1. நிலையறிக்கை ஒரு
   அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை
   ஆ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு
   ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு

2. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள்
   அ) நட்டம் ஆ) ரொக்கம் இ) முதல் ஈ) இலாபம்

3. கடன் விற்பனை தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு
   இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

4. உரிமையாளரின் சொத்துக்கள் ₹85,000 மற்றும் பொறுப்புகள் ₹21,000 எனில் அவருடைய முதல் தொகை.
   அ) ₹85,000 ஆ) ₹1,06,000 இ) ₹21,000 ஈ) ₹64,000

5. வருவாய் மற்றும் செலவின கணக்கு ஒரு
   அ) பெயரளவு கணக்கு ஆ) சொத்து கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

6. வருவாய் செலவின கணக்கு மூலம் கண்டறியப்படுவது
   அ) இலாபம் அல்லது நட்டம் ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
   இ) உபரி அல்லது பற்றாக்குறை ஈ) நிதிநிலை

7. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது
   அ) ஒரு சொத்து ஆ) ஒரு பொறுப்பு
   இ) ஒரு செலவு ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று

8. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது
   அ) சம்பளம் ஆ) கழிவு
   இ) கடன் மீது வட்டி ஈ) முதல் மீது வட்டி

9. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது முதல் மீது வட்டி
   அ) வழங்கப்படுவதில்லை ஆ) வங்கி விதத்தில் வழங்கப்படும்
   இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும் ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

10. பின்வருவனவற்றில் எது இலாபநட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும்?
    அ) அலுவலகச் செலவுகள் ஆ) பணியாளர் ஊதியம்
    இ) கூட்டாளியின் ஊதியம் ஈ) வங்கிக்கடன் மீதான வட்டி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - ஆ

II. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 17 கட்டாய வினா) 5 x 2 = 10

11. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
12. நிலையறிக்கை என்றால் என்ன?
13. உயில் கொடை என்றால் என்ன?
14. கீழ்காணும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| ஆண்டின் தொடக்க முதல் (ஏப்ரல் 1, 2018) | 5,00,000 |
| ஆண்டின் இறுதி முதல் (மார்ச் 31, 2019) | 8,50,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 1,20,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 70,000 |

15. பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ₹ |
|---|---|
| 1.4.2018 அன்று எழுது பொருள்கள் இருப்பு | 2,600 |
| அவ்வாண்டில் வாங்கிய எழுது பொருள்கள் | 6,500 |
| 31.3.2019 அன்று எழுது பொருள்கள் இருப்பு | 2,200 |

16. ஜெயராமன் என்ற கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ₹10,000 எடுத்துக்கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்கவேண்டும். 2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.
17. இலாப நோக்கமற்ற அமைப்புகளின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.

## பகுதி - இ

III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 24 கட்டாய வினா) 5 x 3 = 15

18. முழுமைபெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை? (எவையேனும் 3)
19. வருவாய் மற்றும் செலவின கணக்கு என்றால் என்ன?
20. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.
21. விடுபட்ட தகவலை காணவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2017, ஏப்ரல் 1 அன்று முதல் | 2,50,000 |
| 2018, மார்ச் 31 அன்று முதல் | 2,75,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 30,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 15,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | ? |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



22. ஒரு சங்கத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டு சந்தா மூலம் பெற்ற வருமானத்தைக் கணக்கிடவும்.

| விவரம் | 1.1.2018 (₹) | 31.12.2018 (₹) |
|---|---|---|
| பெற வேண்டிய சந்தா | 10,000 | 7,000 |
| முன்கூட்டிப் பெற்ற சந்தா | 3,000 | 5,000 |

2018 ஆம் ஆண்டு பெற்ற சந்தா ₹1,50,000

23. மணி என்ற கூட்டாளி 2018, செப்டம்பர் 1 அன்று ₹30,000 எடுத்துக்கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% என கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிட்டு மாறுபடும் முதல் முறையில் அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவினை தரவும்.

24. பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனையை கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று கடனாளிகள் | 40,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று கடனாளிகள் | 60,000 |
| கடனாளிகளிடம் பெற்ற ரொக்கம் | 1,00,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| விற்பனைத் திருப்பம் | 2,000 |

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 5 = 15

25. அ) நிலை அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

*(அல்லது)*

ஆ) நிலை முதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

26. அ) மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 50,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 1,50,000 |
| உள்திருப்பம் | 15,000 |
| வாராக்கடன் | 5,000 |
| 2019, மார்ச் அன்று கடனாளிகள் | 70,000 |
| ரொக்க விற்பனை | 1,40,000 |

*(அல்லது)*

ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கை தயார் செய்யவும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கை ரொக்கம் (1.1.2018) | 4,000 | அச்சுக்கட்டணம் செலுத்தியது | 2,500 |
| சம்பளம் கொடுத்தது | 3,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 1,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது | 10,000 | தொடர்விளையாட்டுப் போட்டி வரவுகள் | 14,000 |
| சந்தா பெற்றது | 15,000 | தொடர்விளையாட்டுப் போட்டி செலவுகள் | 10,500 |
| வாடகை பெற்றது | 2,000 | முதலீடுகள் வாங்கியது | 25,000 |

27. அ) கரூர் சமூக மன்றத்தின் 2018 மார்ச் 31 ஆம் நாளைய முதல் நிதியைக் கணக்கிடவும்.

| விவரம் 31.3.2018 | ₹ |
|---|---|
| அறைகலன் | 50,000 |
| கட்டிடம் | 40,000 |
| 2017-18ஆம் ஆண்டிற்கான சந்தா பெறவேண்டியது | 10,000 |
| 2018-19 ஆம் ஆண்டிற்கான சந்தா முன்கூட்டிப் பெற்றது | 5,000 |
| கடன் வாங்கியது | 10,000 |
| முதலீடுகள் | 20,000 |
| கை ரொக்கம் | 4,000 |
| வங்கி ரொக்கம் | 6,000 |

*(அல்லது)*

ஆ) ஊட்டி மனமகிழ் மன்றத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்கள் கணக்கிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவின கணக்கினை தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு கை ரொக்கம் | 5,000 | விளையாட்டுப்பொருள்கள் வாங்கியது | 10,000 |
| வாடகை பெற்றது | 10,000 | எழுதுபொருளுக்காக செலுத்தியது | 7,000 |
| முதலீடுகள் விற்றது | 8,000 | கணிப்பொறி வாங்கியது | 25,000 |
| சந்தா பெற்றது | 54,000 | சம்பளம் | 20,000 |
| | | இறுதி இருப்பு கை ரொக்கம் | 15,000 |
| | 77,000 | | 77,000 |

*****

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com